செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண்: 264 நாள்: 8/5/17

# பத்திரிக்கை செய்தி

கால்நடை பராமரிப்புத் துறையில் காலியாக உள்ள கால்நடை பராமரிப்பு உதவியாளர் பதவிக்கு வேலூர் மாவட்டத்தில் இருந்து விண்ணப்பித்தவர்களுக்கான நேர்காணல் தேர்வு நேதாஜி ஸ்டேடியம், கோட்டை அருகில், வேலூர்-632 004 என்ற முகவரியில் 10.05.2017 முதல் 17.05.2017 வரை தினமும் காலை 9.00 மணி முதல் மதியம் 1 மணி வரையும், 2.00 மணி முதல் மாலை 5.00 மணி வரையும் நடைபெறவுள்ளது.

தகுதியுள்ள விண்ணப்பதாரர்களுக்கு அவர்கள் விண்ணப்பத்தில் குறிப்பிட்டிருந்த முகவரிக்கு நேர்காணலில் கலந்து கொள்வதற்கான நேர்முக அழைப்பாணை தனியே அஞ்சலில் அனுப்பப்பட்டுள்ளது எனவும், அதனில் குறிப்பிட்டுள்ள நாளில், அழைப்பாணை கடிதத்துடன் அனைத்து அசல் சான்றுகளுடன் நேர்காணலில் கலந்து கொள்ள விண்ணப்பதாரர்களுக்கு தெரிவிக்கப்படுகிறது.

மேலும் நேர்முக அழைப்பாணை கிடைக்கப் பெறாதவர்கள் நேர்முக அழைப்பாணைகளை **www.tn.gov.in** என்ற வலைதளத்திலிருந்து **6.5.2017** முதல் பதவிறக்கம் செய்து கொள்ளலாம் மற்றும் நேர்முக அழைப்பாணைகளை **8.5.2017** மற்றும் **9.5.2017** ஆகிய நாட்களில் வேலூர் மாவட்ட மண்டல இணை இயக்குநர் அலுவலகங்களிலும் பெற்றுக் கொள்ளலாம். நேர்முக அழைப்பாணை இல்லாதவர்கள் நேர்முகத் தேர்வு வளாகத்தினுள் செல்வதற்கு அனுமதிக்கப்படமாட்டார்கள் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ஒம்/-
மாவட்ட ஆட்சித்தலைவர், வேலூர்.

மண்டல இணை இயக்குநர்,
கால்நடை பராமரிப்புத்துறை, வேலூர்-4.

8/5/17